# பத்திரிக்கைசெய்தி

நாமக்கல் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மூலம் “சகி ஒருங்கிணைந்த சேவை மையத்தில் (OSC) தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிய தகுதியான நபர்களிடமிருந்து கீழ்கண்டவாறு விண்ணப்பங்கள் 31.03.2022 வரை வரவேற்கப்படுகிறது. அனைத்து பதவிகளுக்கும் வயது வரம்பு 21 முதல் 40 வயது வரை.

**பதவி 1 : வழக்கு கையாளுபவர் - 4 (Case Worker)**

வழக்கு கையாளுபவர் பதவிக்கு விண்ணப்பிக்க நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். சமூகபணி, உளவியல், வளர்ச்சிப்பணிகள் ஆகிய ஏதேனும் ஒன்றில் இளநிலை பட்டப்படிப்பு படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். அரசு, அரசுசாரா தொண்டு நிறுவனங்களில் ஓராண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடைவராவர். ஊதியம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

**பதவி 2 : பாதுகாவலர் - 1 (Security Guard/Driver)**

பாதுகாவலர் பதவிக்கு ஆண்/பெண் இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். பாதுகாப்பு பணியில் முன் அனுபவம் உடைவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாத ஊதியம் : ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

**பதவி 3 : பல்நோக்கு உதவியாளர்– 1(Multi-purpose Helper)**

பல்நோக்கு உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். சமையல், வீட்டு வேலை நன்றாக தெரிந்திருக்க வேண்டும். பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடைவராவர். மாத ஊதியம் : ரூ.6,400/- (ரூபாய் ஆறாயிரத்து நானூறு மட்டும்) வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

மாவட்ட சமூகநல அலுவலகம்
அறை எண்.233,234,
கூடுதல் கட்டிடம்,
மாவட்டஆட்சியரகம், நாமக்கல் - 637003.
தொலைபேசி எண்: 04286 299460.

மாவட்ட ஆட்சித் தலைவர்
நாமக்கல்.